RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2531

OPEN ACCESS

# 2024 ஆம் ஆண்டின் இலங்கையின் பத்தாவது பாராளுமன்றத் தேர்தல் : அதன் முடிவுகள் பற்றிய ஓர் பகுப்பாய்வு

# The 10th Parliamentary Election of Sri Lanka in 2024 : An analysis on its results

**T. Mohamed Mufas [a,*], C. Sivanayagam [a]**

[a] Department of Social Sciences, Eastern University, Sri Lanka

* Corresponding Author: mufasnmohamed@gmail.com

Received: 11-02-2025
Revised: 23-06-2025
Accepted: 02-07-2025
Published: 08-07-2025

Check for updates

## ABSTRACT

Elections are the core aspect in selecting representatives of peoples in a country. In this sense, presidential election and the parliamentary election are the two key elections in Sri Lanka. In the last presidential election of the country, Anura Kumara Dissanayake of National People's Power party (NPP) was elected as the president and he dissolved the Parliament on 14th of September 2024 based on the power vested to him as the president. Hence the 10th parliamentary election was held on 14th of November 2024. In this election, NPP gained the victory with overwhelming majority. In parliamentary elections of Sri Lanka, it is the first time after 1977, a single party, NPP, won the election with 2/3 majority. Meanwhile, the popular parties like New Democratic Front (NDF), Samagi Jana Balavehaya (SJB), Sri Lanka Pothujana Peramuna (SLPP) and United National Party (UNP) found major decline in this election. NPP as a single party gained 159 seats in the election and became the ruling party in the Parliament, and Sajith Premadasa led SJB gained 40 seats and became the opposition party in the Parliament. NPP gained 59% of votes and SJB got 24% of votes in the election. Whereas other ethnic political parties did not get results as previous elections and marked their decline in this election. Moreover, women representation had also increased in the Parliament by this election. The overwhelming victory of NPP ad a single party was caused by the economic crisis of the country and the related issues of previous government. This study is based on secondary data to the analysis.

**Keywords:** Parliamentary election, Parliamentary representation, Women representation, Minority

## முன்னுரை

ஒரு ஜனநாயக நாட்டில் மக்களுடைய பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கான வழிமுறையாக நியாயமானதும் சுதந்திரமானதுமான தேர்தல்கள் முக்கியம் பெறுகின்றன. அந்தவகையில் இலங்கையில் மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்காக தேசிய, மாகாண, உள்ளூர் மட்டங்கள் என்ற அடிப்படையில் காலத்துக்குக் காலம் தேர்தல்கள் நடைபெற்று வருகின்றன. அதன்படி 2024 ஆம் ஆண்டு மாத்திரம் மிக முக்கியமான ஜனாதிபதி தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல் என்ற இரு தேர்தல்களும் ஒன்றன் பின் ஒன்றாக நடைபெற்று அதன் முடிவுகள் இலங்கையில் மரபு ரீதியிலான அரசியல் முறைமை மற்றும் அரசியல் கட்சிகளில் பாரிய வரலாற்று மாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளன. சமகாலத்தில் இலங்கையில் இவ்வரலாற்று மாற்றத்தினை ஏற்படுத்திய கட்சிகளில் மிக முக்கியமானது தேசிய மக்கள் சக்தி (National People's Power) ஆகும். இது ஓர் இடதுசாரி அரசியல் கூட்டணி என்பதோடு மக்கள் விடுதலை முன்னணியின் (JVP) தலைவர் அனுர குமார திசாநாயக்கவினால் 2019 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. மேலும், 2024 இல் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு இவரே ஜனாதிபதியாக தெரிவானார். பின்னர் இவர்

தலைமையிலான தேசிய மக்கள் சக்தி 2024 நவம்பர் 14 இல் நடைபெற்ற 10வது பாராளுமன்றத்திற்கான பொதுத் தேர்தலில் மிகப்பெரிய வெற்றியை பெற்றுள்ளது. இதன்படி இத்தேர்தலில் தனித்து போட்டியிட்ட தேசிய மக்கள் சக்தி பொதுத் தேர்தல் ஒன்றில் கட்சி அதிகூடிய வாக்கினை பதிவு செய்துள்ளது (6>863>186) - (61.56%)> பொதுத் தேர்தல் ஒன்றில் அதிக மாவட்டங்களில் இக்கட்சியெ வெற்றி பெற்றிருந்தது (மட்டக்களப்பு மாவட்டம் தவிர்ந்த) 141 ஆசனங்களை பெற்று மாவட்ட மட்டத்தில் அதிகூடிய ஆசனங்களை பெற்றிருந்தது அத்துடன் பொதுத் தேர்தலில் அதிக தேசியப்பட்டியல் ஆசனங்களைப் (18) பெற்ற தனி ஒரு கட்சியாக தேசிய மக்கள் சக்தி காணப்படுகின்றது. இவ்வாறு ஒரு சடுதியான மாற்றம் ஏற்படுவதற்கு பல காரணங்களை பொது மக்கள் முன்னிலையில் முன்வைத்து வாக்காளர்களின் அரசியல் நடத்தையில் மாற்றத்தினை எற்படுத்தியதனாலேயே தனித்து போட்டியிட்ட இக்கட்சி மிகப் பெரும் பெரும்பான்மையினை பெற முடிந்தது. நாட்டில் 77 வருடங்களுக்கு மேல் ஆட்சி செய்த கடந்த கால ஆட்சியாளர்கள் ஊழல், அதிகார துஸ்பிரயோகம், அண்மையில் ஏற்பட்ட அரசியல், பொருளாதார நெருக்கடி அதனோடு தொடர்பான பல செயற்பாடுகள் காரணமாகவே இக்கட்சி பாரிய வெற்றியினையும் சாதனைகளையும் ஏற்படுத்த முடிந்தது. இதன்படி, பொதுத் தேர்தலில் 159 ஆசனங்களை தேசிய மக்கள் சக்தி பெற முடிந்தது. இதற்கு முன்னர் 2020 இல் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 145 ஆசனங்களை மட்டுமே பெற்றிருந்தது. விகிதாசார முறையின் கீழ் பாராளுமன்றத்தில் உள்ள 225 ஆசனங்களில் 2/3 ஆசனங்களை தனியொரு கட்சி கைப்பற்றுவது இதுவே முதல் தடவையாகும் (Thinakaran, 2024). இதனால் முன்னைய பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியாக செயற்பட்ட சமகி ஜன பலவேகய (SJB) இத்தேர்தலில் பாரிய பின்னடைவினை சந்தித்ததுடன் ஒரு பலவீனமான எதிர்கட்சியாகவும் சமகாலத்தில் செயற்பட்டு வருகின்றது. எனவே பத்தாவது பாராளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி (NPP) மிக அதிகளவான (159) ஆசனங்களை பெற்ற வழிமுறைகளையும், கடந்த ஆண்டு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன (SLPP) 145 ஆசனங்களை பெற்றிருந்தாலும் இம்முறை மிக மோசமான தோல்வியினையும் புதிய ஜனநாயக முன்னணி (NDF), சமகி ஜன பலவேகய (SJB) மற்றும் ஐக்கிய தேசிய கட்சி (UNP) போன்ற கட்சிகள் போதிய ஆசனத்தினை பெற்றுக்கொள்ளாமல் சரிவடைந்தமையையும், பத்தாவது பொதுத் தேர்தலில் சிறுபான்மை கட்சிகளின் அரசியல் நிலை எவ்வாறு காணப்படுகின்றது என்பதனையும் மற்றும் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளமையும் அதனை எதிர்காலத்தில் மேலும் அதிகரிப்பதற்கான தேவைப்பாடுகளையும் முன்வைப்பதன் நோக்கங்களாக கொண்டு இவ்வாய்வானது மேற்கொள்ளப்படுகின்றது. இந்த ஆய்வினை சிறந்த முறையில்; மேற்கொள்வதற்கு முன்னைய ஆய்வுக் கட்டுரைகள், செய்தித் தாள்கள், கடந்த கால தேர்தல் புள்ளிவிவரங்கள், இணையதளத் தரவுகள் மற்றும் அரசியல் ஆய்வாளர்களின் கருத்துக்கள் மூலமாகப் பெறப்பட்ட இரண்டாம் நிலைத்தரவுகளே பயன்படுத்தப்பட்டுள்ளன.

## கலந்துரையாடலும் முடிவும்

### 1. பொதுத் தேர்தலுக்கு முன்னரான அரசியல் சூழல்நிலையும் அதன் பின்னணியும்

சுதந்திரத்துக்கு பின்னரான ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியும் பல சிறிய கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து மாறி மாறி ஆட்சியினை நடத்தி வந்துள்ளன. இவ் ஆட்சி முறைகள் மூலம் எமது நாடு குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை அடைந்து கொள்ளவில்லை என்பது மக்கள் மத்தியில் அதிர்ப்தியான நிலை நிலவி வந்துள்ளது. அதிலும் குறிப்பாக நாட்டில் பல ஆட்சியாளர்களால் ஊழல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வந்தமையும் இவ் அதிருப்திக்கான காரணமாக இருந்துள்ளது. குறிப்பாக 2005ஆம் ஆண்டுலிருந்து இந்நிலைமை மோசமடையத் தொடங்கியது. இந்நிலையில் 2015 ஆம் ஆண்டில் மைத்திரிபால சிறிசேன தலைமையிலான நல்லாட்சி அரசு தோற்றம் பெற்றது. அவ்வாட்சி முறையிலும் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்படவில்லை இதனைத் தொடர்ந்து 2019ஆம் ஆண்டின் ஜனாதிபதி தேர்தல் நடந்தது. அந்தத் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஸ தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சார்பில் போட்டியிட்ட கோட்டாபய ராஜபக்ஸ 69,24,255 வாக்குகளைப் பெற்று வெற்றியைப் பெற்றார்.

அதனைத் தொடர்ந்து 2020 ஆகஸ்த்து 5 அன்று நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் மகிந்த ராசபக்ச தலைமையிலான சிறீலங்கா SLPP அதிகபடியான ஆசனங்களை பெற்று ஆட்சியினை அமைத்துக்கொண்டது. ஆயினும் இந்த ஆட்சிக் காலத்தில் அரசாங்கம் கோவிட்-19 பெருந்தொற்று, பொருளாதார நெருக்கடி, பரவலான எதிர்ப்புப் போராட்டங்கள், 2022 அரசியல் நெருக்கடி (அரகலய) உட்பட பல நெருக்கடிகளை எதிர்கொள்ளலாயிற்று. இதனால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச நாட்டில் ஏற்பட்ட மக்கள் போராட்டத்தை அடுத்து, நாட்டை விட்டு தப்பிச் சென்ற நிலையில், இடைக்கால ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்க பொறுப்பேற்றார். அதனைத் தொடர்ந்து, நாடாளுமன்றத்தில் நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் இலங்கையின் இடைக்கால ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்க அரசியலமைப்புக்கு அமைவாக நியமிக்கப்பட்டார் (ரஞ்சன் அருண் பிரசாத், 2024). அத்தோடு பிரதமராக இருந்த மகிந்த ராஜபக்ஸவும் தனது பதவியினை துறந்தார். அதன்பின்பு தினேஸ் குணவர்தன பிரதமராக நியமனம் செய்யப்பட்டார். இவ்வாறான சூழ்நிலையில் ரணில் விக்கிரமசிங்கவின் பதவிக்காலமும் 2024 இல் முடிவடையும் நிலையில் 9வது ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டது. இதில் ரணில் விக்ரமசிங்க, சஜித் பிரேமதாஸ, அநுரகுமார திஸாநாயக்க, நாமல் ராஜபக்ஸ போன்றவர்கள் பிரதான வெட்பாளர்களாக போட்டியிட்டியிருந்தனர். தொடர்ந்து 2024 செப்டெம்பர் 21 அன்று நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் அனுர குமார திசாநாயக்க தனது முக்கிய போட்டியாளர்களான எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, ரணில் விக்கிரமசிங்க ஆகியோரைத் தோற்கடித்து இலங்கையின் 10வது ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார். அதன்பின்னர் அரசியலமைப்பின் பிரகாரம் இலங்கை பாராளுமன்றத்தின் பதவிக் காலம் 5 வருடங்களாயினும் பாரளுமன்றம் முதல் கூட்டத்திலிருந்து இரண்டரை (2-1/2) வருடங்களுக்குப் பின்னர் ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைப்பதற்குள்ள அதிகாரத்தின் கீழ் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க பாராளுமன்றத்தினை கலைத்ததுடன் புதிய பாராளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான தேர்தல் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் குறிப்பிட்ட தினத்தில் தேர்தல் நடைபெற்றது.

## 2. பாராளுமன்ற தேர்தல் முறைமையும் 10வது பாராளுமன்ற தேர்தலுக்கு ஒதுக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட மாற்றமும்

இலங்கை பாராளுமன்றத் தேர்தல் முறையினை நோக்கும் போது 1978ம் ஆண்டு அரசியலமைப்பானது அதற்கு முன்பிருந்த தேர்தல் தொகுதி முறைமைக்கும் தேர்தல் மாவட்டங்களுக்கும் அடிப்படை மாற்றமொன்றை அறிமுகம் செய்தது. முந்திய முறைமையானது, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளால் நியமிக்கப்பட்ட, தனிப்பட்ட வேட்பாளர்களுடன் அல்லது சுயேச்சை வேட்பாளர்களுடன் தேர்தல் தொகுதிகளையும் கொண்டமைந்திருந்தது. குறிப்பிட்ட தேர்தல் தொகுதியில் அதிகூடிய எண்ணிக்கையிலான வாக்குகளைப் பெறுபவர் தொகுதி உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார் (இலங்கை பாராளுமன்றம், 2012). பின்னர் இம்முறை விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைமையாக மாற்றப்பட்டது. இதன்படியே இலங்கையில் தற்போது பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்று வருகின்றது. சட்டப்பிரிவு 96 (1) வது பிரிவு, தேர்தலை நடத்துவதற்கு, நாட்டை இருபதுக்கு குறையாத மற்றும் இருபத்தைந்துக்கு மேலாகாமல் தேர்தல் மாவட்டங்களாகப் பிரிக்கப்படும் என்று கூறுகிறது (Krishnamohan & Sathiyasegar, 2020). ஆனால் இலங்கையில் நிர்வாக மாவட்டங்கள் மொத்தமாக 25 உள்ளன அதில் சரத்து 96 (3) இன் படி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா ஆகிய மூன்று நிர்வாக மாவட்டங்களை இணைத்து எல்லை நிர்ணய ஆணைக்குழுவினால் வன்னி என்ற தேர்தல் மாவட்டம் உருவாக்கப்பட்டது. அதே போன்று யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி போன்ற இரண்டு நிர்வாக மாவட்டங்களை இணைத்து எல்லை நிர்ணய ஆணைக்குழுவினால் யாழ்ப்பாணம் என்ற தேர்தல் மாவட்டமும் உருவாக்கப்பட்டது (Krishnamohan & Sathiyasegar, 2020). இதன்படி எல்லை நிர்ணய ஆணைக்குழுவானது தேர்தல் மாவட்டங்கள் 22 ஆக நிர்ணயித்துக் கொண்டது. மொத்தமாகக் குறித்த தேர்தல் மாவட்டங்களிற்கான வாக்களிப்பின் அடிப்படையில் 196 உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படுகின்றனர். அரசியலமைப்பின் 15 ஆவது திருத்தம் அறிமுகம் செய்த, 99 (அ) உறுப்புரை, குறிப்பிட்ட அரசியல்

கட்சிகளால் அல்லது சுயேச்சை குழுக்களால் தேசிய மட்டத்தில் (தேசியப் பட்டியல்) பெறப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு 29 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவதற்காக அறிவிக்கப்பட ஏற்பாடு செய்கிறது (இலங்கை பாராளுமன்றம், 2012). இங்கு 196 உறுப்பினர்களும் இரு வழிமுறைகளில் தெரிவு செய்யப்படுகின்றனர். அவை 22 தேர்தல் மாவட்டங்களிலிருந்து சனத்தொகை அடிப்படையில் 160 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள், மேலும் பிரிவு 98 (2) இன் அடிப்படையில், மாகாண மட்டத்திற்கு என முப்பத்தாறு (36) நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒதுக்கீடு செய்யப்படுவார்கள். இவ் 36 உறுப்பினர்களும் ஒரு மாகாணத்திற்கு நான்கு உறுப்பினர் வீதம் ஒம்பது மாகாணங்களிற்கும் ஒதுக்கப்பட்டு அம்மாகாணத்திலிருக்கும் மாவட்டங்களுக்குறிய ஆசனங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு குறிப்பிட்ட மாவட்டத்திற்கு தெரிவு செய்யப்பட வேண்டிய மொத்த உறுப்பினர்கள் தொகை அறிவிக்கப்பட்டு அதன்படி தெரிவு இடம்பெறும் இந்த அடிப்படையில் தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின்னர் வேட்பு மனுதாக்கல் செய்யப்படும் பொருட்டு ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட வேண்டிய உறுப்பினர்களைக் கொண்டதாக ஒரு அரசியல் கட்சி அல்லது ஒரு சுயாதீனக் குழு வேட்பாளர்களின் பெயர்களின் பட்டியலைச் சமர்ப்பிக்க வேண்டும். அத்தகைய பட்டியலில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையை விட மூன்று உறுப்பினர்கள் அதிகம் கொண்டதாக அப்பட்டியல் இருக்க வேண்டும் (Krishnamohan & Sathiyasegar, 2020). அதன் பின்னர் தேர்தல் இடம்பெற்று வாக்குகள் கணிப்பீட்டின்படி அரசியலமைப்பின் 99(6) (அ) உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய, ஒரு மாவட்டத்தில் அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் 1/20 க்கு (5%) குறைவான வாக்குகளைப் பெறும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழு தகுதியற்றதாக்கப்படும். எஞ்சிய செல்லுபடியான வாக்குகள், விகிதாசாரக் கணிப்பீட்டு அடிப்படையில் ஆசனங்கள் ஒதுக்கப்படுகின்றன, ஒவ்வொரு மாவட்டத்திலும் அதிகூடிய எண்ணிக்கையான வாக்குகளைப் பெறும் அரசியற் கட்சி அல்லது சுயேட்சைக்குழு மேலதிகமாக ஓர் உறுப்பினரைத் தெரிவு செய்யப்படுவதற்கான வாய்ப்பை பெறுகின்றது (மேலதிக ஆசனம்). எஞ்சிய எண்ணிக்கையான ஆசனங்களுக்கு, அரசியற்கட்சியால் அல்லது சுயேச்சைக் குழுவால் பெற்றுக் கொள்ளப்பட்ட வாக்குகளின் அடிப்படையில், உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவார்கள் (இலங்கை பாராளுமன்றம், 2012). இதைவிட தேசியப் பட்டியல் மூலம் 29 உறுப்பினர்களும் தேசிய ரீதியாக கட்சி அல்லது சுயேட்சைக்குழுக்கள் பெறும் வாக்குகளின் விகிதாசாரத்திற்கு அமைய ஆசனங்கள் ஒதுக்கப்பட்டு நாடு பூராகவும் இருந்து நாடாளுமன்றத்திற்கு மொத்தமாக 225 பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படுவர். இந்த அடிப்படையில் 196 உறுப்பினர்கள் மாவட்ட அடிப்படையில் பின்வருமாறு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அட்டவணை 1. மாவட்ட மட்டத்தில் 10வது பாராளுமன்றத்திற்கு தெரிவான உறுப்பினர்களின் பட்டியல் - 2024

| இல | தேர்தல் மாகாணங்கள் | தேர்தல் மாவட்டம் | மாவட்ட மட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள் |
|---|---|---|---|
| 1. | மேற்கு | கொழும்பு | 18 |
| | | கம்பஹா | 19 |
| | | களுத்துறை | 11 |
| 2. | மத்திய | கண்டி | 12 |
| | | நுவரெலியா | 08 |
| | | மாத்தளை | 05 |
| 3. | தெற்கு | காலி | 09 |
| | | மாத்தறை | 07 |
| | | ஹம்பாந்தோட்ட | 07 |
| 4. | வடமேற்கு | குருநாகல் | 15 |
| | | புத்தளம் | 08 |
| 5. | சப்ரகமுவ | இரத்தினபுரி | 11 |

| | | | |
|---|---|---|---|
| | | கேகாலை | 09 |
| 6. | கிழக்கு | திகமடுல்ல | 07 |
| | | மட்டக்களப்பு | 05 |
| | | திருகோணமலை | 04 |
| 7. | வட-மத்திய | அனுராதபுரம் | 09 |
| | | பொலன்னறுவை | 05 |
| 8. | ஊவா | பதுளை | 09 |
| | | மொனராகலை | 06 |
| 9. | வடமாகாணம் | யாழ்ப்பாணம் | 06 |
| | | வன்னி | 06 |
| மொத்தம் | | | 196 |

(ஆதாரம்: பகுப்பாவின் முடிவு, 2024)

9வது பாராளுமன்ற தேர்தலுக்கு ஒதுக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கையில் அதாவது 2020 ஆம் ஆண்டின் போது கொழும்பு (19), யாழ்ப்பாணம் (7) உறுப்பினர்களை தெரிவு செய்ய ஒதுக்கப்பட்டிருந்தது. ஆயினும் 2024 இன் 10வது பாராளுமன்றத்திற்கு குறித்த இரு மாவட்டங்கள் முன்னைய எண்ணிக்கையிலிருந்து தலா ஒன்று விகிதம் குறைக்கப்பட்டு இவை முறையே கம்பஹா (19), களுத்துறை (11) மாவட்டங்களுக்கு கொடுத்து தலா ஒன்று என்ற அடிப்படையில் அதிகரிக்கப்பட்டன. இவை மாவட்ட வாக்காளர்களின் விகிதாசார மாற்றத்திற்கு ஏற்பவே மேற்கொள்ளப்பட்டன.

## 3. இலங்கையின் பத்தாவது பாராளுமன்றம்

2024 இல் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளரான அனுர குமார திசாநாயக்க ஜனாதிபதியாக தெரிவானார். பின் அரசியலமைப்பின்படி தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தினை பயன்படுத்தி 2024 செப்டம்பர் 14 ஆம் திகதி பாராளுமன்றத்தினைக் கலைத்து புதிய நாடாளுமன்ற தேர்தல் திகதியும் அறிவிக்கப்பட்டது. (நவம்பர் 14) அதற்கமைய, இத்தேர்தலில் ஒரு கோடியே 71 இலட்சத்து 40 ஆயிரத்து 354 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர். இதன்படி பாராளுமன்றத்திற்கு 225 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக மொத்தமாக 8,821 வேட்பாளர்கள் இம்முறை போட்டியிட்டதாக, தேர்தல் ஆணைக்குழு 2024 ஒக்டோபர் 12 ஆம் திகதி வெளியிட்ட ஊடக அறிவிப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது. இதில் 5,464 வேட்பாளர்கள் பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளாகவும், 3,357 பேர் சுயேட்சை குழுக்களின் பிரதிநிதிகளாகவும் போட்டியிட்டிருந்தனர் (Suji Shabeedhran, 2024).

*அட்டவணை 2 10வது பாராளுமன்ற தேர்தல் நடவடிக்கைகள்இ 2024*

| விளக்கம் | தொகை |
|---|---|
| மொத்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் | 225 |
| தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் | 196 |
| தேசிய பட்டியல் உறுப்பினர்கள் | 29 |
| வேட்பாளர்களின் எண்ணிக்கை | 8,361 |
| தகுதியான வாக்காளர்களின் எண்ணிக்கை | 17,140,354 |
| தேர்தல் மாவட்டம் | 22 |
| தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கை | 13,314 |
| வாக்குச் சாவடிகள் | 13,421 |
| தேர்தல் பணியில் போலீசார் மற்றும் இராணுவம் | 9,0000 |

(ஆதாரம்: Thinakaran, 2024)

**இலங்கையில் ஆகஸ்ட் 5, 2020 அன்று நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், பதினைந்து அரசியல் கட்சிகள் தங்கள் உறுப்பினர்களை நாடாளுமன்றத்தில் நிறுத்தியிருந்தனர். 2020 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் SLPP பெரும்பாலான இடங்களைப் பெற்றது. ஒன்பதாவது நாடாளுமன்றத் தேர்தலில் 59% வாக்குகளைப் பெற்ற SLPP 145 இடங்களைப் பெற்று வெற்றியைப் பதிவு செய்திருந்தது. ஆயினும் 2024 பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி கூடுதலான ஆசனங்களைப் பெற்றுக் கொண்டுள்ளது. இதற்கிணங்க தேசிய மக்கள் சக்தி 18 தேசியப்பட்டியல் உள்ளடங்களாக 159 ஆசனங்களையும், ஐக்கிய மக்கள் சக்தி 5 தேசியப்பட்டியலோடு 40 ஆசனங்களையும் பெற்றுக்கொண்டன. (ஒவ்வொரு கட்சியும் பெற்றுக்கொண்ட ஆசனங்களைக் குறித்துக்காட்டும் அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது) இருப்பினும் கடந்த ஜனாதிபதித் தேர்தலுடன் ஒப்பிடுமிடத்து வடக்கு, கிழக்கு, மத்திய மாகாணங்களின் வாக்குபதிவில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதனையும், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் தலைமையிலான தேசிய மக்கள் சக்தி குறித்த மாகாணங்களில் இம்முறை முன்னிலை வகிப்பதனையும் காணக்கூடியதாக உள்ளது (Suji Shabeedhran, 2024). இறுதியான நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி வெட்பாளர் அநுரகுமார திஸாநாயக்காவுக்கு கிடைத்த வாக்குகளை விட 10வது பாராளுமன்றத் தேர்தலில் 'அனுர அலை' என்ற விடயம் உருவாகி அதிகபடியான வாக்குகளையும் (6,863,186) ஆசனங்களையும் (159) தனி ஒரு கட்சி கைப்பற்றிக்கொண்டது முக்கியத்துவம் பெறுகின்றது.**

*அட்டவணை 3 வாக்களிக்கப்பட்ட நிலவரப்படிஇ ஒவ்வொரு கட்சியும் பெற்ற வாக்குகள் மற்றும் நாடாளுமன்ற ஆசனங்களின் விபரங்கள்*

| இல | கட்சிகள் | வாக்குகள் | % | தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்கள் | தேசிய பட்டியல் | மொத்த ஆசனம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | தேசிய மக்கள் சக்தி (NPP) | 6,863,186 | 61.56% | 141 | 18 | 159 |
| 2. | ஐக்கிய மக்கள் சக்தி (SJB) | 1,968,716 | 17.66% | 35 | 5 | 40 |
| 3. | புதிய ஜனநாயக முன்னணி (NDF) | 500,835 | 4.49% | 3 | 2 | 5 |
| 4. | ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன (SLPP) | 350,429 | 3.14% | 2 | 1 | 3 |
| 5. | இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி (ITAK) | 257,813 | 2.31% | 7 | 1 | 8 |
| 6. | சர்வசன அதிகாரம் (ளடி) | 1,78,006 | 1.60% | 0 | 1 | 1 |
| 7. | ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசு (SLMC) | 87,038 | 0.78% | 2 | 1 | 3 |
| 8. | ஐக்கிய தேசிய கட்சி (UNP) | 66,234 | 0.59% | 1 | 0 | 1 |
| 9. | சனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி (DTNA) | 65,382 | 0.59% | 1 | 0 | 1 |
| 10. | அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | 39,894 | 0.36% | 1 | 0 | 1 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | (ACTC) | | | | | |
| 11. | அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் (ACMC) | 33,911 | 0.30% | 1 | 0 | 1 |
| 12. | யாழ்ப்பாணம் - சுயேச்சைக் குழு 17 (IND17-10) | 30,637 | 0.27% | 1 | 0 | 1 |
| 13. | இலங்கை தொழில் கட்சி (SLLP) | 17,710 | 0.16% | 1 | 0 | 1 |
| மொத்தம் | | | | 196 | 29 | 225 |

(ஆதாரம்: பகுப்பாவின் முடிவு, 2024)

மேற்குறிப்பிட்ட 10வது பாராளுமன்றத் தேர்தலின் முடிவுகளின்படி 2020 இன் பாராளுமன்றத் தேர்தலில் பல கட்சிகளில் போட்டியிட்டு வெற்றிபெற்ற பலர் இம்முறை வேட்பாளர்களாக போட்டியிடவில்லை என்பதுடன் அக்கட்சிகள் பெரும் தோல்வியினையும் சந்திதுள்ளமையினை அறியமுடிகின்றது. அந்தவகையில் ஐக்கிய மக்கள் சக்தி (SJB), ஐக்கிய தேசிய கட்சி (UNP) அத்தோடு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மற்றும் பொதுஜன பெரமுன ஆகியன பின்னடைந்து பிளவினை சந்தித்துமுள்ளன. அத்துடன் தேசிய ரீதியில் செயற்படும் ஏனைய கட்சிகளும் பாரிய பின்னடைவைச் சந்தித்துள்ளன. குறிப்பாக கடந்த நாடாளுமன்றத்தில் பிரதான எதிர்கட்சியாக விளங்கிய சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியும் பாரிய பின்னடைவைச் சந்தித்துள்ளது. நாட்டை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்டதாக குறிப்பிடப்பட்ட ரணில் விக்ரமசிங்க தலைமையிலான புதிய ஜனநாயக முன்னணியும் பாரிய வீழ்ச்சி கண்டுள்ளது. அதிலும் கடந்த நாடாளுமன்றத்தில் பிரதான எதிர்கட்சியாக விளங்கிய சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி இத்தேர்தலில் பாரிய பின்னடைவைச் சந்தித்து எதிர்க்கட்சி ஸ்தானத்தை தக்கவைத்துக் கொண்டுள்ளது. இருப்பினும் பலவீனமான ஒரு எதிர்கட்சியாகவே தற்போது செயற்பட்டு வருகின்றது. 2020 ஆம் ஆண்டின் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியாக ஐக்கிய மக்கள் சக்தி 54 இடங்களை பெற்று முக்கிய எதிர்க்கட்சியாக இருந்தமையினையும் இங்கு குறிப்பிட்டுக்காட்ட வேண்டும்.

மேலும், ராஜபக்ஸ தலைமையிலான பொதுஜனப் பெரமுன 2020ஆம் ஆண்டில் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் மிகப் பெரிய வெற்றி பெற்றது. ஒட்டுமொத்தமாக 68,53,690 வாக்குகளும் 145 இடங்களும் கூட்டமைப்பிற்குக் கிடைத்தன. இந்த 2019ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி 4,18,553 வாக்குகளுடன் மூன்றாவது இடத்தையே பிடித்தது. அதனைத் தொடர்ந்து நடந்த 2020 நாடாளுமன்றத் தேர்தலில், தேசிய மக்கள் சக்திக்கு நான்காவது இடமே கிடைத்தது. நாடாளுமன்றத்தில் அதற்கு மூன்று இடங்களே கிடைத்தன. ஆனால், நான்கு வருடங்களில் அரசியல் ரீதியாக மக்களிடத்தில் பெரிய மாற்றம் உருவாகியிருந்தது. சமீபத்தில் நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் அநுர குமார திஸாநாயக்க வெற்றிபெற்றதோடு, இப்போது நடந்து முடிந்திருக்கும் நாடாளுமன்றத் தேர்தலிலும் மிகப் பெரிய வெற்றியைப் பெற்றுள்ளது. 10வது பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 3 இடங்கள் மட்டுமே (தேசியப் பட்டியல் 1) பெற்று படுதோல்வி கண்டுள்ளது. 2020 ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் 225 இடங்களில் பெரும்பான்மையுடன் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி வெற்றிபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. கடந்த 75 ஆண்டுகளாக நாட்டை ஆட்சி செய்துவரும் பாரம்பரிய அரசியல் கட்சிகளை மக்கள் புறக்கணித்துள்ளனரென்பதை தேர்தல் முடிவுகள் புலப்படுத்துகின்றன நடந்து முடிந்த இலங்கையின் நாடாளுமன்றத் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸவின் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி மிக மோசமான தோல்வியை தழுவியுள்ளது.

இலங்கையின் தமிழர் பகுதிகளில் இதுவரை காலம் தமிழ் அரசியல் கட்சிகள் முன்னிலை வகித்து வந்த நிலையில், வரலாற்றில் முதல் தடவையாக பெரும்பாலான தமிழர் பகுதிகளில் தேசிய கட்சியாக விளங்கும் தேசிய மக்கள் சக்தி வெற்றி பெற்றுள்ளது. குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இதுவரை நடந்த அனைத்து தேர்தல்களிலும் தமிழ்க் கட்சிகளே வெற்றி பெறுவது வழக்கமானது. ஆயினும் நாடாளுமன்ற வரலாற்றில் தமிழ் அரசியல் கட்சிகள் பாரிய பின்னடைவைச் சந்தித்துள்ளன. குறிப்பாக மட்டக்களப்பு தேர்தல் மாவட்டம் தவிர்த்து, ஏனைய தமிழர் தேர்தல் மாவட்டங்கள் அனைத்திலும் தேசிய மக்கள் சக்தி அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ளது. நாட்டில் முறைமை மாற்றத்தை விரும்பிய தென்னிலங்கை பெரும்பான்மையின மக்களுடன் தற்போது வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ், முஸ்லிம் மக்களும் தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவளித்துள்ளதை தேர்தல் பெறுபேறுகள் மூலம் அறிய முடிகின்றது. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்திக்கு கணிசமான ஆதரவு வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் மத்தியில் இருந்தாலும், இந்த பாராளுமன்றத் தேர்தலில் அவர்கள் நேரடியாகவே தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவு வழங்கியுள்ளனர். தமிழ்க் கட்சிகளுக்கிடையில் பூசல்கள் தீவிரமடைந்துள்ளதால், தமிழ் மக்கள் தற்போது புதிய தெரிவுக்கு வந்துள்ளனரென்று அரசியல் அவதானிகள் கூறுகின்றனர். இலங்கை அரசியல் வரலாற்றில் தவிர்க்க முடியாத அரசியல் குடும்பமாகக் காணப்பட்ட ராஜபக்~ குடும்பம், இம்முறை பாராளுமன்ற அரசியல் களத்தில் இருந்து மக்களால் புறக்கணிக்கப்பட்டுள்ளதைக் காண முடிகின்றது.

## 4. புதிய பாராளுமன்றத்தில் பெண்கள் பிரதிநிதித்துவம்

கடந்த காலங்களை விடவும் இம்முறை நடைபெற்ற 10வது பாரளுமன்றத் தேர்தலில் குறிப்பிடத்தக்களவான பெண்கள் போட்டியிட்டு வெற்றிபெற்றுக் கொண்டனர். இதன்படி இலங்கை வரலாற்றில் பெண்கள் அரசியலில் ஈடுபடுகின்றமை தற்போது படிப்படியாக அதிகரிக்க ஆரம்பித்துள்ளதை அவதானிக்க முடிகின்றது. பெண்கள் பிரதிநிதித்துவத்தில், 1989-ஆம் ஆண்டு முதல் 2020-ஆம் ஆண்டு வரை சற்று அதிகரிப்பு காணப்பட்டாலும், இந்த முறை நடைபெற்று முடிவடைந்த தேர்தலில் பெண்கள் பிரதிநிதித்துவம் குறிப்பிடத்தக்களவு உயர்ந்துள்ளது ஆயினும் இவ்வாறு தெரிவான பெண்களின் எண்ணிக்கை போதுமானதாகவில்லை என்பது ஆய்வாள்களின் கருத்தாகும். ஏனெனில் இலங்கையின் மொத்த சனத்தொகையில் 50% க்கும் அதிகமான பெண்கள் உள்ளனர். இருப்பினும், உள்ளூர் மற்றும் தேசிய மட்டங்களில் அரசியல் பங்கேற்பைப் பொறுத்தவரை, பெண் அரசியல்வாதிகளின் எண்ணிக்கை நாட்டில் மிகக் குறைந்த மட்டத்தில் உள்ளது. உலகின் முதல் பெண் பிரதமரை மூன்று முறை அந்தப் பதவியில் பணியாற்றியதில் இலங்கை மகிழ்ச்சியடைந்தது, மேலும் அவரது மகள் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தொடர்ச்சியாக இரண்டு முறை ஜனாதிபதியாகப் பணியாற்றினார். அதன் பின்னர் இலங்கை அரசியலில் பெண்களின் பங்களிப்பில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எதுவும் காணப்படவில்லை (Krishnamohan & Sathiyasegar, 2020). இருப்பினும் பல வருடங்களுக்குப் பிறகு பிரதமராக கலாநிதி (செல்வி) ஹரினி அமரசூரிய என்பவர் நியமிக்கப்பட்டமையானது பெண்களின் பிரதிநிதித்துவத்தில் புதிய அத்தியாயத்தினை உருவாக்கியுள்ளது.

கடந்த 2020 பாராளுமன்றத் தேர்தலில் பெண்களின் பிரதிநிதித்துவத்தினை அவதானிக்கும் போது இத்தேர்தலில் போட்டியிட்ட அரசியல் கட்சிகளிடமிருந்து எட்டு (8) வேட்பாளர்கள் மட்டுமே தேர்தலில் வெற்றி பெற்றனர். மேலும், தேசியப் பட்டியல் உறுப்பினர்களாக நான்கு (4) பெண்களுமாக 12 பெண்கள் நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தனர். ஆனால் தற்போது நடந்து முடிந்த 2024 பாராளுமன்ற தேர்தலில், மொத்தமாக 22 பெண் பிரதிநிதிகள் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் 20 பேர் தேசிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் ஆவர். இதில் பிரதமர் ஹரிணி அமரசூரிய உட்பட 19 பெண்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு தேசிய மக்கள் சக்தி (NPP) முன்னிலை வகிக்கிறது, மீதமுள்ள இருவர் சமகி ஜன பலவேகயாவைச் சேர்ந்தவர்கள் (Newswire, 2024). அத்தோடு தேசிய மக்கள் சக்தி (NPP) சார்பில் தேசிய பட்டியல் மூலமாக ஒரு பெண் பிரதிநிதியும் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அத்தோடு மலையக அரசியல் வரலாற்றில் முதல் தடவையாக மலையக சமூகத்தைச் சேர்ந்த மூன்று பெண்கள் பாராளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ளனர். 1977 ஆம் ஆண்டு முதலாவதாக மலையக பெண் பிரதிநிதித்துவத்தைப் பெற்ற மலையக சமூகம் கடந்த 47 வருடங்களின் பின் இவ்வாறான வெற்றியினைப் பெற்றது முக்கிய விடயமாகும். இருப்பினும் பெண் பாராளுமன்ற பிரதிநிதிகள் சார்பில் முஸ்லிம் பெண்கள் எவரும் தெரிவுசெய்யப்படவில்லை என்பது சுட்டிக்காட்டப்படத்தக்கது. 10வது பாராளுமன்றத் தேர்தலில் தெரிவான பெண் பிரதிநிதிகளின் விபரங்களை கீழே உள்ள அட்டவணை சுட்டிக்காட்டுகிறது.


*அட்டவணை 5. 10வது பாராளுமன்றத்தில் பெண் பிரதிநிதிகள்*

| கட்சி | மாவட்டம் | பெயர் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி (NPP) | கொழும்பு | கலாநிதி (செல்வி) ஹரினி அமரசூரிய |
| தேசிய மக்கள் சக்தி (NPP) | கம்பஹா | திருமதி ஹேமாலி வீரசேகர |
| தேசிய மக்கள் சக்தி (NPP) | மாத்தறை | திருமதி சரோஜா சாவித்திரி போல்ராஜ் |
| தேசிய மக்கள் சக்தி (NPP) | கேகாலை | திருமதி (சட்டத்தரணி) சாகரிகா அதாவுத |
| தேசிய மக்கள் சக்தி (NPP) | கொழும்பு | கலாநிதி (செல்வி) கௌ'ல்யா ஆரியரத்ன |
| தேசிய மக்கள் சக்தி (NPP) | களுத்துறை | திருமதி ஒ'ானி உமங்கா |
| தேசிய மக்கள் சக்தி (NPP) | நுவரெலியா | செல்வி கிரு'ணன் கலைச்செல்வி |
| தேசிய மக்கள் சக்தி (NPP) | களுத்துறை | திருமதி (சட்டத்தரணி) நிலந்தி கொட்டஹச்சி |
| தேசிய மக்கள் சக்தி (NPP) | மொனராகலை | திருமதி எம்.ஏ.சீ.எஸ். சத்துரி கங்கானி |
| தேசிய மக்கள் சக்தி (NPP) | இரத்தினபுரி | திருமதி நிலூ'ா லக்மாலி கமகே |
| தேசிய மக்கள் சக்தி (NPP) | கொழும்பு | திருமதி சமன்மலீ குணசிங்ஹ |
| தேசிய மக்கள் சக்தி (NPP) | மகநுவர | திருமதி (சட்டத்தரணி) து'ாரி ஜயசிங்ஹ |
| தேசிய மக்கள் சக்தி (NPP) | நுவரெலியா | திருமதி (சட்டத்தரணி) அனுஸ்கா திலகரத்ன |
| தேசிய மக்கள் சக்தி (NPP) | திகாமடுல்ல | திருமதி ஏ.எம்.எம்.எம். ரத்வத்தே |
| தேசிய மக்கள் சக்தி (NPP) | காலி | திருமதி (சட்டத்தரணி) ஹசாரா லியனகே |
| தேசிய மக்கள் சக்தி (NPP) | மாத்தளை | திருமதி தீப்தி வாசலகே |
| தேசிய மக்கள் சக்தி (NPP) | புத்தளம் | திருமதி (சட்டத்தரணி) ஹிருனி விஜேசிங்ஹ |
| தேசிய மக்கள் சக்தி (NPP) | பதுளை | செல்வி அம்பிகா சாமிவெல் |
| தேசிய மக்கள் சக்தி (NPP) | குருணாகல் | திருமதி (சட்டத்தரணி) கீதா ஹேரத் |
| தேசிய மக்கள் சக்தி (NPP) | (தேசியப்பட்டியல்) | செல்வி (சட்டத்தரணி) லக்மாலி ஹேமசந்திர |
| ஐக்கிய மக்கள் சக்தி (SJB) | மாத்தளை | திருமதி ரோஹினீ குமாரி விஜேரத்ன |
| ஐக்கிய மக்கள் சக்தி (SJB) | மகநுவர | திருமதி சட்டத்தரணி சமிந்திரானி கிரிஎல்லே |

(ஆதாரம்: பகுப்பாவின் முடிவு, 2024)

1994 முதல் 2020 வரையிலான இலங்கையின் அனுபவத்துடன் ஒப்பிடும்போது, இலங்கையில் பெண்கள் பிரதிநிதித்துவம் மிகக் குறைந்த மட்டத்திலேயே இருந்து வந்திருக்கின்றது ஆயினும் இறுதியாக நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் 21 பெண் வெட்பாளர்கள் வெற்றிபெற்றமையும் இலங்கை நாடாளுமன்றத்தில் பெண் பிரதிநிதித்துவத்தில் மொத்தமாக 22 பேர் அங்கம் வகிக்கின்றமையும் முக்கியமானதாகும். கடந்த 1994 - 2024 வரையான ஆண்டுகளில் இலங்கையின்

**பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தின் எண்ணிக்கையினை கீழ் உள்ள விளக்கப்படம் - 1 சுட்டிக்காட்டுகின்றது.**




**வரைபடம் 1. 1994 - 2029 இலங்கை பாரளுமன்றத்தில் பெண் பிரதிநிதிகள்**

**(ஆதாரம்: பகுப்பாவின் முடிவு, 2024)**

## 5. பாராளுமன்றத்தில் தமிழ் மற்றும் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள்

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை பார்க்கும் போது தேசிய மக்கள் சக்தி (13), இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி (8), ஐக்கிய மக்கள் கூட்டணி (3), ஐக்கிய தேசிய கட்சி (1), அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் (1), ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி (1) மற்றும் யாழ்ப்பாண தேர்தல் தொகுதியில் சுயேச்சைக் குழு 17 சார்பாக ஒருவரும் தெரிவு செய்யப்பட்டனர். மொத்தமாக தமிழ் பேசும் பிரதிநிதிகள் 28 பேர் 10வது பாராளுமன்றத்திற்கு தெரிவாகியுள்ளனர். ஆயினும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி போன்ற தமிழ் கட்சிகள் கடந்த பாராளுமன்றத் தேர்தலில் முறையே 1 ஆசனம், 2 ஆசனம் எனப் பெற்றிருந்தன இருப்பினும் இம்முறைதேர்தலில் எந்தவிதமான ஆசனங்களையும் இவ்விரு கட்சிகளும் பெற்றுக்கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களை பார்க்கும் போது பத்தாவது பாராளுமன்றில் 22 உறுப்பினர்கள் தெரிவாகியுள்ளனர். இவர்கள் அனைவரும் பல்வேறு அரசியல் கட்சிகளின் சார்பாக நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து பிரதிநிதிகளாக தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் சிங்கள மக்களினை பெரும்பான்மையாகக் கொண்ட மாவட்டங்களிலும் முஸ்லிம் பிரதிநிதிகள் தேசிய மக்கள் சக்தி (NPP) சார்பில் போட்டியிட்டு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இதில் கட்சிகளின் அடிப்படையில் பாராளுமன்றை பிரதிநிதித்துவப்படுத்தும் முஸ்லிம் உறுப்பினர்கள் : தேசிய மக்கள் சக்தி (8), ஐக்கிய மக்கள் கூட்டணி (6), ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் (3), அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் (1), இலங்கை தொழில் கட்சி (1), புதிய ஜனநாயக முன்னணி (1) போன்ற அடிப்படையில் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவாகியுள்ளனர். கீழ் உள்ள அட்டவணை மூலம் தெரிவு செய்யப்பட்ட தமிழ், முஸ்லீம் உறுப்பினர்களையும் அவர்கள் தெரிவான கட்சிகளையும் அறிந்து கொள்ள முடியும்.

***அட்டவணை 5.*** *10வது நாடாளுமன்றத் தேர்தல் 2024 இல் தமிழ் உறுப்பினர்கள்*

| தெரிவு முறை | தேசிய மக்கள் சக்தி | ஐக்கிய மக்கள் கூட்டணி | இலங்கை தழிழரசுக் கட்சி | ஐக்கிய தேசிய கட்சி | ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | சுயேச்சைக் குழு 17 | அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் |
|---|---|---|---|---|---|---|---|
| தெரிவு | 12 | 2 | 7 | 1 | 1 | 1 | 1 |
| தேசியப்பட்டியில் | 1 | 1 | 1 | - | - | - | - |
| மொத்தம் | 13 | 3 | 8 | 1 | 1 | 1 | 1 |

**(ஆதாரம்: பகுப்பாவின் முடிவு, 2024)**

***அட்டவணை 6.*** *10வது நாடாளுமன்றத் தேர்தல் 2024 இல் முஸ்லிம் உறுப்பினர்கள்*

| தெரிவு முறை | தேசிய மக்கள் சக்தி | ஐக்கிய மக்கள் கூட்டணி | ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசு | அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் | இலங்கை தொழில் கட்சி | புதிய ஜனநாயக முன்னணி |
|---|---|---|---|---|---|---|
| தெரிவு | 7 | 6 | 2 | 1 | 1 | - |
| தேசியப்பட்டியில் | 1 | 2 | 1 | - | - | 1 |
| மொத்தம் | 8 | 8 | 3 | 1 | 1 | 1 |

**(ஆதாரம்: பகுப்பாவின் முடிவு, 2024)**

கடந்த பாராளுமன்றத்தில் தெரிவு செய்யப்பட்ட பல தமிழ், முஸ்லிம் உறுப்பினர்கள் இம்முறை போட்டியிட்டும் தோல்வியினைத் தழுவியிருந்தனர். பிரதானமாக வடக்கு மற்றும் கிழக்கில் பலம்பொருந்திய உறுப்பினர்களாக இருந்த பலர் இன்று பாராளுமன்ற அங்கத்துவத்தை இழந்துள்ளனர்.

## முடிவுரை

இலங்கையின் உள்நாட்டு அரசியலில் பல தசாப்தங்களுக்கு பிறகு பாரிய மாற்றத்தினை ஜனதா விமுக்திப் பெரமுன (JVP) இலிருந்து உருவாகிய தேசிய மக்கள் சக்தி என்ற கட்சி ஏற்படுத்தியுள்ளது. இதன் விளைவால் இலங்கையில் மரபு ரீதியாக காணப்பட்ட அரசியல் முறைமை மற்றும் அரசியல் கட்சி என்பது பின் தள்ளப்பட்டு புதியதோர் அரசியல் மாற்றத்தினை இலங்கை மக்கள் எதிர்பார்த்ததன் காரணமாக தனி ஒரு கட்சி அதிக பெரும்பான்மையினை 2024 ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் பெற்றுக் கொண்டது. இதற்கு மிக முக்கியமான பல காரணங்கள் அடையாளப்படுத்தப்படுகின்றன அதாவது கடந்த கால அரசாங்கங்களில் ஊழல், அதிகார துஷபிரயோகம், அரசியல் பொருளாதார பின்னடைவுகள், இன முரண்பாடுகள் எனப் பல காரணங்கள் தாக்கம் செலுத்தியுள்ளன. இதனால் இப்பொதுத் தேர்தலில் வாக்காளர்களுடைய நடத்தையில் மாற்றம் ஏற்பட்டு அது 'முறைமை மாற்றத்தினை (System Change)' உருவாக்கி தனி ஒரு கட்சியான தேசிய மக்கள் சக்தி 159 ஆசனங்களை பெற்றுக் கொண்டு அரசாங்கத்தினை அமைத்துக்கொண்டது. இதற்காக ஊழலற்ற ஆட்சியாளர்களை கொண்டுவருதல், ஊழல் வாதிகளை நீதியின் முன் நிறுத்துதல், பல்லினத்தன்மையினை உறுதிப்படுத்துதல், அரசு செலவீனத்தை குறைத்தல், பொருளாதார பின்னடைவை நீக்கி பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தக்கூடிய பல சுலோகங்களை முன்னிறுத்தி தேசிய மக்கள் சக்தி ஆட்சியினை கைப்பற்றி கொண்டது. ஆயினும், தற்போதைய சூழ்நிலையில் மக்கள் முன் வைக்கப்பட்ட மேற்கூறிய விடயங்களை நிறைவேற்ற வேண்டிய சூழலுக்கு இக்கட்சி தள்ளப்பட்டுள்ளது. இதனை ஏற்று தென்னிலங்கை மட்டுமல்லாது வட, கிழக்கு சிறுபான்மை மக்களான தமிழ், முஸ்லிம் மக்களும் அனுர குமார திசானாயக்கவின் தலைமையிலான தேசிய மக்கள் சக்திக்கு பாரிய ஆதரவினை இம்முறை வழங்கி உள்ளனர். தாங்கள் வழங்கிய தேர்தல் வாக்குறிதிகளை நிறைவேற்ற வேண்டிய சூழ்நிலைக்கு இவ்வரசாங்கம் தள்ளப்பட்டுள்ளது. குறிப்பாக நாட்டின் பொருளாதார வளர்ச்சி, ஊழல் மற்றும் இலஞ்சமற்ற ஆட்சி, அரசு செலவினை குறைத்தல், புதிய யாப்பினை உருவாக்குதல் மற்றும் தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்த்தல், நிறைவேற்று அதிகார

முறைமையை அகற்றி பாராளுமன்ற முறைமைக்கு மாறுதல் என பல விடயங்கள் எதிர்காலத்தில் நிறைவேற்ற வேண்டிய கடமையும் பொறுப்பும் இவ்வரசாங்கத்திற்கு இருக்கின்றது. அத்துடன் சஜித் பிரேமதாசா தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி எதிர்க்கட்சியாக தற்போது செயற்பட்டு வந்தாலும் பலமான ஒரு எதிர்க்கட்சியாக இது காணப்படவில்லை. அத்தோடு சிறுபான்மையினரை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கட்சிகள் இம்முறை வட, கிழக்கில் பாரிய பின்னடைவினை சந்தித்துள்ளன. மேலும், தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் புதிய அரசியலமைப்பை கொண்டுவரப்போவதாக அறிவித்திருக்கும் நிலையில் தமிழ், முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களின் வகிபங்கு முக்கியமானதாக கருதப்படுகின்றது. அத்தோடு இலங்கைத் தமிழர் பிரச்சினை, அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தம், அதிகாரப் பகிர்வு செயன்முறை, சமஷ;டி ஆட்சிமுறையின் அடிப்படையிலான தீர்வு, காணிப்பிரச்சினை, காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை என பல விடயங்கள் நீண்டகால அடிப்படையில் அரசியல் தீர்வு இல்லாமல் கடந்த கால அரசாங்கங்கள் தட்டிக்கழித்து வந்திருக்கின்றன. மக்கள் மத்தியில் உருவான இம்மாற்றத்தின் ஊடாக உருவான புதிய அரசாங்கம் அனைத்து தரப்பினருக்கும் சாதகமான மாற்றத்தினை எவ்வாறு ஏற்படுத்தப்போகின்றது என்பது எதிர்கால செயற்பாடுகளின் ஊடாகவே அவதானிக்கக் கூடியதாக இருக்கும்.

## References


BBC. (2024). இலங்கை நாடாளுமன்றத் தேர்தல் எவ்வாறு நடக்கும்? வாக்களிப்பது எப்படி? முழு விவரம். Retrieved from: https://www.bbc.com/tamil/articles/cvg5pnnzp7po.amp

BBC. (2024). இலங்கை நாடாளுமன்றத் தேர்தல்: 159 இடங்களைக் கைப்பற்றி அநுர குமாரவின் கட்சி பாரிய வெற்றி Retrieved from: https://www.bbc.com/tamil/articles/cr7nj9dp7nyo

BBC. (2024). இலங்கை நாடாளுமன்றம் கலைப்பு - புதிய ஜனாதிபதி பதவியேற்ற மறுநாளே நடவடிக்கை. Retrieved from: https://www.bbc.com/tamil/articles/cpqz7xnnrjeo

Fact crescendo. (2024). இம்முறை பாராளுமன்றத் தேர்தலில் எவ்வாறு வாக்களிப்பது என்பது பற்றி தெளிவின்றி உள்ளீர்களா? Retrieved from: https://srilanka.factcrescendo.com/tamil/how-to-vote-in-this-parliamentary-election/.

Krishnamohan, T & Sathiyasegar, K (2020). The ninth parliamentary election of Sri Lanka in 2020 : An analysis of the outcomes, Retrieved from: https://www.researchgate.net/publication/345248238_The_Ninth_Parliamentary_Election_of_Sri_Lanka_in_2020_An_Analysis_of_the_Outcomes

Newswire. (2024). Record number of women elected to Sri Lankan Parliament in 2024 Retrieved from: https://www.newswire.lk/2024/11/16/record-number-of-women-elected-to-sri-lankan-parliament-in-2024/

Suji Shabeedhran. (2024). வடக்கு, கிழக்கு மற்றும் மத்திய மாகாணங்களில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்திய 2024 பாராளுமன்றத் தேர்தல் Retrieved from: https://srilanka.factcrescendo.com/tamil/the-2024-parliamentary-elections-brought-massive-change-in-the-northern-eastern-and-central-provinces/

Suji Shabeedhran. (2024). பாராளுமன்ற அங்குத்துவத்தை இழந்த மூத்த தமிழ் உறுப்பினர்கள் மற்றும் அங்கத்துவம் பெற்ற புதிய தமிழ் உறுப்பினர்கள் Retrieved from: https://srilanka.factcrescendo.com/tamil/senior-tamil-members-who-have-lost-their-parliamentary-membership-and-new-tamil-members-who-have-gained-membership/

Thavanathan Ravivarman. (2024). சுதந்திரக்கட்சி - பொதுஜன பெரமுன ஆகிய கட்சிகள் பின்னடைவைச் சந்தித்துள்ளன : சுஜீவ சேனசிங்க! Retrieved from: https://athavannews.com/2024/1379440#google_vignette

Thinakaran. (2024). 2024 பாராளுமன்றத் தேர்தல்; முக்கியமான தகவல்கள். Retrieved from: https://www.thinakaran.lk/2024/11/13/breaking-news/95908/2024-%e0%ae%aa%e0%ae%be%e0%ae%b0%e0%ae%be%e0%ae%b3%e0%af%81%e0%ae%ae%e0%ae%a9%e0%af%8d%e0%ae

%b1%e0%ae%a4%e0%af%8d-%e0%ae%a4%e0%af%87%e0%ae%b0%e0%af%8d%e0%ae%a4%e0%ae%b2%e0%af%8d-%e0%ae%ae%e0%af%81/

Thinakaran. (2024). திகாமடுல்லவில் தோல்வியுற்ற அதாவுல்லாஹ், முஷாரப், பைஸல் காசிம் Retrieved from : https://www.thinakaran.lk/2024/11/16/breaking-news/96689/%e0%ae%a4%e0%ae%bf%e0%ae%95%e0%ae%be%e0%ae%ae%e0%ae%9f%e0%af%81%e0%ae%b2%e0%af%8d%e0%ae%b2%e0%ae%b5%e0%ae%bf%e0%ae%b2%e0%af%8d-%e0%ae%a4%e0%af%8b%e0%ae%b2%e0%af%8d%e0%ae%b5%e0%ae%bf%e0%ae%af%e0%af%81/

Thinakaran. (2024). தேசிய மக்கள் சக்திக்கு வரலாற்று வெற்றி> Retrieved from : https://www.thinakaran.lk/2024/11/16/breaking-news/96718/%e0%ae%a4%e0%af%87%e0%ae%9a%e0%ae%bf%e0%ae%af-%e0%ae%ae%e0%ae%95%e0%af%8d%e0%ae%95%e0%ae%b3%e0%af%8d-%e0%ae%9a%e0%ae%95%e0%af%8d%e0%ae%a4%e0%ae%bf%e0%ae%95%e0%af%8d%e0%ae%95%e0%af%81-%e0%ae%b5/

Thinakaran. (2024). முதல் தடவையாக மலையக தமிழ்ப்பெண்கள் மூவர் தெரிவு Retrieved from : https://www.thinakaran.lk/2024/11/16/breaking-news/96633/%e0%ae%ae%e0%af%81%e0%ae%a4%e0%ae%b2%e0%af%8d-%e0%ae%a4%e0%ae%9f%e0%ae%b5%e0%af%88%e0%ae%af%e0%ae%be%e0%ae%95-%e0%ae%ae%e0%ae%b2%e0%af%88%e0%ae%af%e0%ae%95-%e0%ae%a4%e0%ae%ae%e0%ae%bf%e0%ae%b4/

Thinakaran. (2024). வரலாற்று வெற்றிவாகை சூடிய தேசிய மக்கள் சக்தி Retrieved from : https://www.thinakaran.lk/2024/11/16/featured/96530/%e0%ae%b5%e0%ae%b0%e0%ae%b2%e0%ae%be%e0%ae%b1%e0%af%8d%e0%ae%b1%e0%af%81-%e0%ae%b5%e0%af%86%e0%ae%b1%e0%af%8d%e0%ae%b1%e0%ae%bf%e0%ae%b5%e0%ae%be%e0%ae%95%e0%af%88-%e0%ae%9a%e0%af%82%e0%ae%9f/

அய்னா எப். (2024). பாராளுமன்றத் தேர்தல் 2024: தகுதியான வேட்பாளர்களை உடன் இனங்காண வேண்டும். Retrieved from: https://www.vidivelli.lk/article/17820

இராஜதுரை ஹ˜hன். (2024). முதன் முறையாக 20 பெண் பிரதிநிதிகள் பாராளுமன்றத்துக்கு தெரிவு - தேசிய மக்கள் சக்தி சார்பில் 18 பெண் பிரதிநிதிகள் Retrieved from: https://www.virakesari.lk/article/198931

இலங்கை பாராளுமன்றம் (2012). தேர்தல் முறைமை. Retrieved from: https://www.parliament.lk/ta/members-of-parliament/the-system-of-elections-in-sri-lanka/the-electoral-system

இலங்கை பாராளுன்றம் (2024). பொதுத் தேர்தல் 2024 - முடிவுகள். Retrieved from: https://beta.parliament.lk/ta/election-2024/results

சுஹைல் எஸ்.என்.எம். (2024). பத்தாவது பாராளுமன்றில் முஸ்லிம் பிரதிநிதித்துவம். Retrieved from: https://www.vidivelli.lk/article/18275

முரளிதரன் காசிவிஸ்வநாதன். (2024). இலங்கை: ராஜபக்ஸ குடும்பத்தை மக்கள் அரசியலில் இருந்து புறக்கணித்து விட்டார்களா? Retrieved from: https://www.bbc.com/tamil/articles/ce8d220v8neo

ரஞ்சன் அருண் பிரசாத் (2024). 2024 இலங்கை ஜனாதிபதி தேர்தல்: வேட்பாளர்கள் குறித்த முக்கிய தகவல்கள். Retrieved from: www.bbc.com/tamil/articles/cx29erzy5w5o.amp

ரஞ்சன் அருண் பிரசாத் (2024). அநுர குமாரவின் கட்சி தமிழர் பகுதிகளை கைப்பற்றியது எப்படி? Retrieved from: https://www.bbc.com/tamil/articles/cn7mjj88lyvo

ரஞ்சன் அருண் பிரசாத் (2024). இலங்கை நாடாளுமன்றத்திற்கு முதன் முறையாக இந்திய வம்சாவளி மலையக பெண்கள் 3 பேர் தேர்வு Retrieved from: https://www.bbc.com/tamil/articles/c4g2l3we2yno.amp

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author’s have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2025. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License